சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08.
ந.க.எண். 6225/அ6/2023. நாள். 11 .08.2023.

பொருள்: பள்ளிக்கல்வி – கலைப் பண்பாட்டு துறை தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் சென்னை மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள் 12.08.2023 மற்றும் 13,08,2023 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறுதல் பள்ளி மாணவர்கள் அதிக அளவில் கலந்து கொள்ள கோருதல் தொடர்பாக

பார்வை: சென்னை-08, தமிழ்நாடு கலை பண்பாட்டுத்துறை இயக்குநரின் செயல்முறைகள்,ந.க.எண்.2789/ஈ2/2023 நாள்.04.08.2023

-----

மேற்காண் பொருள் சார்ந்து பார்வையில் காண் கடிதத்திற்கிணங்க அரசு/அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளிடம் மறைந்து கிடக்கும் கலைத்திறன்களை வெளிக்கொணரும் வகையில் பரதநாட்டியம், கிராமிய நடனம், குரல் இசை, ஓவியம் ஆகிய நான்கு தலைப்புகளில் போட்டிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளதால் இணைப்பில் உள்ள அறிவுரைகளை பின்பற்றி ஒவ்வொரு போட்டிக்கும் அதிகபட்சம் ஐந்து குழந்தைகள் என ஒவ்வொரு பள்ளிகளிலும் தேர்வு செய்து அனுப்புமாறு அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

இணைப்பு : தமிழ்நாடு கலை பண்பாட்டுத்துறை இயக்குநரின் செயல்முறைகள்

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை.

பெறுநர்

அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.

Speed post - ES 269251255IN 10/8/23

1

**கலை பண்பாட்டுத்துறை**

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| திரு.சே.ரா.காந்தி, இ.ர.பா.ப., | முதன்மை கல்வி அலுவலர், |
| இயக்குநர், | பனகல் மாளிகை, முதல் தளம், |
| கலை பண்பாட்டுத்துறை, | சைதாப்பேட்டை, |
| தமிழ் வளர்ச்சி வளாகம், இரண்டாம் தளம், | சென்னை – 15. |
| **தமிழ்ச் சாலை, எழும்பூர்,** | |
| **சென்னை–600 008.** | |

**ந.க.எண்.2789/ஈ2/2023** நாள் : 04.08.2023
தி.ஆ.2054, ஆடி 19

அய்யா / அம்மையீர்,

பொருள் கலை பண்பாட்டுத்துறை – தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் – சென்னை மாவட்ட அளவிலான கலைப்போட்டிகள் 12.08.2023 மற்றும் 13.08.2023 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறுதல் – பள்ளி மாணவர்கள் அதிக அளவில் கலந்து கொள்ள கோருதல் – தொடர்பாக.

------

கலை பண்பாட்டுத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும், தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தின் வாயிலாக 5 முதல் 16 வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு, கலைப்பயிற்சிகள் அளித்து வருகிறது. சிறார்களிடையே மறைந்து கிடக்கும் கலைத்திறன்களை வெளிக்கொணரும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் பரதநாட்டியம், கிராமிய நடனம், குரலிசை, ஓவியம் ஆகிய நான்கு கலைகளில் போட்டிகள் நடத்தியும், அவற்றில் 9–12, 13–16 வயது பிரிவில் முதல் பரிசு பெற்றவர்களிடையே மாநில அளவில் போட்டி நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கி ஊக்குவித்து வருகிறது.

அவ்வகையில், 12.08.2023 மற்றும் 13.08.2023 ஆகிய இரண்டு நாட்கள் பரதநாட்டியம், கிராமிய நடனம், குரலிசை மற்றும் ஓவியம் ஆகிய கலைகளில் சென்னை மாவட்ட அளவிலான கலைப்போட்டிகள் 5-8, 9-12, 13-16 ஆகிய மூன்று வயது வகைப்பிரிவில் நடத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு வயது வகைக்கும், ஒவ்வொரு போட்டிக்கு அதிகபட்சம் 5 குழந்தைகள் என ஒவ்வொரு பள்ளியிலிருந்து தெரிவு செய்து அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகளின் பெயர், வயது, பிறந்த தேதி, வீட்டு முகவரி, பள்ளியின் பெயர் ஆகியவற்றை தாங்கள் அனுப்பும் கடிதத்தில் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.போட்டியில் கலந்து கொள்பவர்கள் வயது சான்றுக்கான (Birth Certificate) சான்றிதழ் கொண்டு வரவேண்டும்.

| வ. எண் | போட்டியின் பெயர் | வயது | நாள் | நேரம் | போட்டி நடைபெறுமிடம் |
|---|---|---|---|---|---|
| 1. | பரதநாட்டியம் | 5 வயது முதல் 8 வயது முடிய | 12.08.2023 | காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரை | தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகம், டாக்டர் டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600008 |
| | | 9 வயது முதல் 12 வயது முடிய | | காலை 11.00 மணி முதல் 1.00 மணி வரை | |
| | | 13 வயது முதல் 16 வயது முடிய | | பிற்பகல் 2.00 மணி முதல் 4.30 மணி வரை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | கிராமிய நடனம் | 5 வயது முதல் 8 வயது முடிய | | காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரை | தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகம், டாக்டர் டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600008 |
| | | 9 வயது முதல் 12 வயது முடிய | | காலை 11.00 மணி முதல் 1.00 மணி வரை | |
| | | 13 வயது முதல் 16 வயது முடிய | | பிற்பகல் 2.00 மணி முதல் 4.30 மணி வரை | |
| 3. | குரலிசை | 5 வயது முதல் 8 வயது முடிய | | காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரை | தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகம், டாக்டர் டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600008 |
| | | 9 வயது முதல் 12 வயது முடிய | | காலை 11.00 மணி முதல் 1.00 மணி வரை | |
| | | 13 வயது முதல் 16 வயது முடிய | | பிற்பகல் 2.00 மணி முதல் 4.30 மணி வரை | |
| 4. | ஓவியம் | 5 வயது முதல் 8 வயது | | காலை 10.00 மணி முதல் 11.30 மணி வரை | தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகம், டாக்டர் டி.ஜி.எஸ்.தினகரன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 9 வயது முதல் 12 வயது | 13.08.2023 | காலை 10.30 மணி முதல் 12.30 மணி வரை | சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600008 |
| | | 13 வயது முதல் 16 வயது முடிய | | காலை 10.45 மணி முதல் 12.45 மணி வரை | |

<u>இப்போட்டிக்கான விதிமுறைகள் பின்வருமாறு,</u>

1. பரதநாட்டியம் (செவ்வியல்)

பரத நாட்டியம், குச்சிப்புடி, மோகினி ஆட்டம் போன்ற நடனங்கள் ஆடலாம். முழு ஒப்பனை மற்றும் உரிய உடைகளுடன் நடனம் இருத்தல் வேண்டும், திரைப்படப் பாடல்களுக்கான நடனங்கள் (கர்நாடக இசை பாடல்களுக்கான திரைப்பட நடனங்கள் தவிர்த்து) மேற்கத்திய நடனங்கள் மற்றும் குழு நடனங்களுக்கு அனுமதியில்லை. குறுந்தகடுகள் / பென் டிரைவ் ஆகியவற்றினை பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை போட்டியில் பங்கேற்பவர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் 3 நிமிடங்கள், அதிக பட்சம் 5 நிமிடங்கள் வரை நடனமாட அனுமதிக்கப்படும்.

2. கிராமிய நடனம் (நாட்டுப்புறக் கலை)

தமிழகத்தின் மாண்பினை வெளிப்படுத்தும் கிராமிய நடனங்கள் ஆடலாம். முழு ஒப்பனை மற்றும் உரிய உடைகளுடன் நடனம் இருத்தல் வேண்டும் திரைப்படப் பாடல்களுக்கான நடனங்கள் (கிராமிய இசை பாடல்களுக்கான திரைப்பட நடனங்கள் தவிர்த்து) மற்றும் குழு நடனங்கள் அனுமதியில்லை. குறுந்தகடுகள் / பென் டிரைவ் பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை போட்டியில் பங்கேற்பவர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் 3 நிமிடங்கள், அதிக பட்சம் 5 நிமிடங்கள் வரை நடனமாட அனுமதிக்கப்படும்.

3. குரலிசை

கர்நாடக இசை பாடல்கள், தேசியப் பாடல்கள், சமூக விழிப்புணர்ச்சி பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள் மட்டுமே பாட வேண்டும். மேற்கத்திய இசை, திரைப்பட பாடல்கள், பிற மொழி பாடல்கள், குழுப்பாடல்களுக்கு அனுமதியில்லை. குறைந்த பட்சம் 3 நிமிடங்கள், அதிக பட்சம் 5 நிமிடங்கள் வரை பாட அனுமதிக்கப்படும்.

**4. ஓவியம்**

**40X30 செ.மீ அளவுள்ள**, ஓவியத் தாள்களையே பயன்படுத்த வேண்டும். **பென்சில், கிரையான், வண்ணங்கள்**, போஸ்டர் கலர், வாட்டர் கலர் , ஆயில் கலர் **பெயிண்டிங்** என எவ்வகையிலும் ஓவியங்கள் அமையலாம். ஓவியத்தாள், வண்ணங்கள், தூரிகைககள் (Brush) உட்பட தங்களுக்குத் தேவையானவற்றைப் போட்டியாளர்களே கொண்டு வருதல் வேண்டும். குழுவாக ஓவியங்கள் வரைய அனுமதியில்லை. ஒவ்வொரு வயது வகைக்கும் தனித் தனியாக தலைப்புகள் **போட்டி** தொடங்கும் போது அறிவிக்கப்படும்

5. வயது விவரம் (1.6.2023 அன்று உள்ளபடி 16 வயது)

அ. 5 முதல் 8 வயது பிரிவு - 01.06.2015 முதல் 31.05.2018 வரை

ஆ. 9 முதல் 12 வயது பிரிவு - 01.06.2011 முதல் 30.05.2015 வரை

இ. 13 முதல் 16 வயது பிரிவு - 01.06.2007 முதல் 30.05.2010 வரை

மேற்காண் விவரங்களை சென்னையிலுள்ள பள்ளிகளுக்கு தெரிவித்து, அதிகப்படியான மாணவர்கள் பங்குகொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், கூடுதல் விவரங்களுக்கு 044-28192152 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்/-) சே.ரா.காந்தி.,
இயக்குநர்

// நேர்பபடி அனுப்பலாகிறது //

8/8/2023
துணை இயக்குநர்
8/8/23